கூடலூர் நகராட்சி(நீலகிரி)

**31.12.2020 ம் தேதி வியாழ கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்**

**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1) இந்நகராட்சிக்குட்பட்டு சார்ந்துள்ள வனங்களில் பனியர்கள்/பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்தை நடத்திக் கொள்ள 1) நெல்லிக்காய் 2) தேன் 3) சீமார் புல்லு 4) சீனக்காய் 5) தண்டைச்செடி 6) குருடாட்டி செடி 7) பாடை கிழங்கு 8) கட்டாடு கிழங்கு 9) விறகு 10) சீகரும் வேர் 11) அமுல்பொறி வேர் 12) தோமராடி வேர் 13) தொட்டாஸ்சினுங்கி வேர் ஆகியவகைளை பறித்து தங்களின் வாழ்வாதரத்தை நடத்திக் கொள்ள தலைவர் மற்றும் செயலர் குளியன் வன உரிமை குழு ஏழுமுறம் மார்த்மோமா நகர், கூடலூர் அவர்கள் வழங்கியுள்ள மனு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்படி இடங்கள் வனத்துறைக்குட்பட்டதால் வனத்துறையின் சட்ட பிரிவின் கீழ் அனுமதி வழங்குவது குறித்து தீர்மான நகல் அனுப்பி வைக்கலாம்.

2) இந்நகராட்சிக்குட்பட்டு சார்ந்துள்ள வனங்களில் பனியர்கள்/பழங்குடியின மக்கள் வாழ்வாதாரத்தை நடத்திக் கொள்ள 1) நெல்லிக்காய் 2) தேன் 3) சீமார் புல்லு 4) சீனக்காய் 5) தண்டைச்செடி 6) குருடாட்டி செடி 7) பாடை கிழங்கு 8) கட்டாடு கிழங்கு 9) விறகு 10) சீகரும் வேர் 11) அமுல்பொறி வேர் 12) தோமராடி வேர் 13) தொட்டாஸ்சினுங்கி வேர் ஆகியவகைளை பறித்து தங்களின் வாழ்வாதரத்தை நடத்திக் கொள்ள தலைவர் மற்றும் செயலர் வேட்டைக்காரன் வன உரிமை குழு ஏழுமுறம் மார்த்மோமா நகர், கூடலூர் அவர்கள் வழங்கியுள்ள மனு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1) பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2) மேற்படி இடங்கள் வனத்துறைக்குட்பட்டதால் வனத்துறையின் சட்ட பிரிவின் கீழ் அனுமதி வழங்குவது குறித்து தீர்மான நகல் அனுப்பி வைக்கலாம்.

3) அராணை (நிலை) எண்.105 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் (கொடு தடு.2) துறை நாள் 19.10.2020 அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, திராவிடர்/பழங்குடியினர்/கிறுஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் இனத்தவர்களின் ஈமச்சடுங்கிற்கு வழங்கப்படும் தொகை ரூ.2500/– லிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தியும் இத்தொகையை பெறுவதற்கு ஏதுவாக இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு தொகையாக ரூ.72000/– ஆக உயர்த்தியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே இனி வரும் காலங்களில் ஈமச்சடங்கு நிதி கோரி விண்ணப்பித்தவர்களுக்கு ரூ.2500/–லிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

4) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் இந்நகராட்சி வரியினங்கள் செலுத்தகோரி சீருந்து மூலம் ஆடியோ பதிவு செய்து விளம்பரம் செய்து கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.50000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –**

1) செலவினங்களுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) உள்ளூர் விளம்பரதாரர் வசம் ஆடியோ பதிவு செய்து கொள்ள அனுமதிக்கலாம்.
3) சீருந்துக்கு தேவையான எரிபொருட்களை வாங்கி வழங்க மற்றும் வாடகை தொகை வழங்க அனுமதிக்கலாம்.

வரிசை எண் 1 முதல் 3 வரை உள்ள அனைத்து இனங்களுக்கும் அனுமதி வழங்கலாம்.

5) முதன்மை செயலர் பொது சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அவர்களின் கடிதம் எண்.17413B1/2020 நாள்.21.11.2020 எண்ணிட்ட கடிதத்தில் தூய்மை பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பு பணியில் உரிய காப்பீடுகள் பிரதான் மந்திரி கரீப் கல்யாண் திட்டத்தின் கீழ் வழங்குவது குறித்து உயர்நீதி மன்றத்தில் மதுரை கிளையில் சூரிய பிரகாசம் என்பவர் வழக்கு எண் WP.No.7442/2020 என்ற வழக்கின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண் 3577/2020/டி10 நாள்.27.10.2020–ன் படி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் கொரோனா தடுப்பு காப்பீடு திட்டத்தை அடுல்படுத்த கேட்டுக் கொண்டுள்ளனர். எனவே நகராட்சி பொது சுகாதார நிரந்தர தூய்மை பணியாளருக்கு காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெற மன்றத்தின் அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் நீலகிரி மாவட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் ந.க.டி10 எண்.20280/2020 நாள்.03.12.2020 – ன்படி இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டிற்கு 2020–2021 ம் ஆண்டிற்கான பங்கு தொகை ரூ.2500/– ஐ வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

7) இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 6 வண்டிபேட்டை பகுதியில் அமைந்துள்ள பாரதிதாரசன் வணிக வளாகம் காய்கறி சந்தை அருகாமையில் உள்ள கட்டண கழிப்பிடம் பழுதடைந்து உபயோக படுத்துவதற்கு இயலாமல் இருந்த நிலையில் அதை தற்பொழுது பராமரிப்பு செய்யப்பட்டு மேற்படி கழிப்பிடமானது பொது ஏலம்/ஒப்பந்தம் மூலம் ஒப்படைப்பு செய்ய மற்றும் உரிமம் வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**ஏலம் கோரும் இனங்கள்**

**கழிப்பிடம்**

பாரதிதாசன் வணிக வளாகம் காய்கறி சந்தை அருகாமையில் உள்ள கட்டண கழிப்பிடம்

8) இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு 4 வாகனங்களுக்கு 07.12.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலணைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | 1 டயரின் விலை ரூ. | 5டயர்களுக்கான விலை ரூ. | வாகனத்தின் எண்ணிக்கை | மொத்த தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | மேலாளர், பவர் பின் டயர்ஸ், கள்ளிக்கோட்டை சாலை, செம்பாலா, கூடலூர். | 4750/– | 23750/– | 4 | 95000/– |
| 2. | பாப்புலர் டயர்ஸ், டி. கே. பேட்,கள்ளிக்கோட்டை சாலை, கூடலூர். | 4875/– | 24375/– | 4 | 97500/– |
| 3. | டயரக்ஸ், செம்பாலா, கூடலூர். | 4400/– | 22000/– | 4 | 88000/– |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3ல் கண்ட டயரக்ஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதாலும் அதனை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மேற்காண் செலவினத்திற்கு தோராயமாக செலவினம் ரூ. 80,000/– ற்கு அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் அதிகம் ஏற்படும் செலவினத்திற்கு ரூ.10,000/–ற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய டயரக்ஸ் நிறுவனத்திலிருந்து 1. வாகன எண்.TN43X1825 2.TN43X1830 3. TN43Y8293 4. TN43X1822 ஆகிய வாகனங்களுக்கு தலா 5 எண்ணிக்கை வீதம் டயர்கள் வாங்கிக் கொள்ளலாம்.
3. மேற்காணும் நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கி அதற்கு ஏற்படும் செலவினங்களை செய்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள கிருமி நாசினியான பிளீச்சிங் பவுடர் இருப்பு இல்லாததாலும் மேற்படி பணிக்கு தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு 3 டன் பிளீச்சிங் பவுடர் வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று 3 டன் பிளீச்சிங் பவுடர் வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

10) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உள்ள தூய்மை பணியாளர்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கான அரசாணையில் தெரிவித்துள்ளவாறு கம்பளி வாங்கி வழங்க ஏற்படும் தோராய செலவினம் ரூ. 60,000/– திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**அரசாணையில் தெரிவித்துள்ளவாறு 2020–2021 ஆம் ஆண்டிற்கான பொது சுகாதார தூய்மை பணியாளர்களுக்கு கம்பளி வாங்கி வழங்கவும் அதற்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

11) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள வாகனம் TN43 Y8698 ன் டயர்கள் தேய்மானம் அடைந்துள்ளதால் அதனை புதுப்பித்து Re- Trading செய்து உபயோகப்படுத்த கேட்டுள்ளார். எனவே உள்ளூர் நிறுவனத்தின் மூலம் Re- Trading செய்து பணி செய்து கொள்ள ஏற்படும் தோராய செலவினம் ரூ.40,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**TN43Y8698 ன் டயர்களை உள்ளூர் நிறுவனத்தின் மூலம் Re- Trading செய்து பயன் படுத்திக் கொள்ள அனுமதியும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

12) இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பணிக்கு கொரோனா தொற்று பரவலை தடுக்க கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு Eco- Clean-50 Plus திரவம்– 25 லிட்டர் உரிய அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று வாங்கிக் கொள்ள அனுமதியும் அதற்கான தோராய செலவினம் ரூ. 1,50,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று வாங்கி கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

13) இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட வார்டுகளில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைக்காக பணிகளை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

1) வார்டு எண் 8 டாக்டர் காலனி பகுதியில் தடுப்புச்சுவருடன் கூடிய சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.9.20 இலட்சம்.
2) வார்டு எண் 8 பள்ளிப்படி பகுதியில் Reach - I தடுப்புச்சுவர் அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம்
3) வார்டு எண் 9 சளிவயல் பகுதியில் தடுப்புச்சுவருடன் கூடிய நடைபாதை அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சம்.
4) வார்டு எண் 18 தோட்டமூலா ரோஜா நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.9.20 இலட்சம்.
5) வார்டு எண் 17 தொரப்பள்ளி குட்ஷிப்பேடு பம்பு அறைக்கு Ms Ladder மற்றும் 80 MM Dia GI Pipe and Electrical Items புதியதாக மாற்றி அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.1.80 இலட்சம்.
6) கல்குவாரி கோழிப்பாலம் நம்பர்–1 மற்றும் 2 செம்பாலா, தட்டகொல்லி தொரப்பள்ளி பள்ளிவாசல் ஆகிய பகுதிகளில் உள்ள் பம்பு அறைக்கு எலக்ட்ரிக்கல் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் நம்பர் 4 செக்டேம் மற்றும் ஹெல்லன் செக் டேம் தூர்வாரி குடிநீர் குழாய் மாற்றி அமைத்தல் மதிப்பீடு தொகை ரூ.6.60 இலட்சம்.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

14) கூடலூர் நகராட்சியில் மூலதன மானிய நிதி 2019–2020 -ன் கீழ் பேரூந்து நிலையம் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.4.75 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி ந.க.எண்:2486/M.A/IV(2) 2019–7 நாள்.04.11.2019–ல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 27.11.2020–ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை ஒப்பந்தபுள்ளி 11.12.2020 அன்று திறக்கப்பட்டதின் விபரம் கீழ் வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | கூடலூர் பேரூந்து நிலையம் விரிவாக்கம் மற்றும் மேம்படுத்துதல் | 4.75 | திரு.வி.பி.செபாஸ்டின் | 4.89% மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | திருவாளர்.சிவபரமேஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன் & கோ. | 7.78% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்ததில் திரு.வி.பி.செபாஸ்டின் அவர்கள் மட்டும் தகுதி பெறுவதால் மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.89 % அதிகமாக கொடுத்துள்ளார். ஒப்பந்ததாரர் திரு.வி.பி.செபாஸ்டின், பந்தலூர் அவர்களிடம் 11.12.2020 விலை குறிப்பு கோரப்பட்டது.

ஒப்பந்ததாரத் தனது விலைகுறைப்பு கடிதத்தில் விலை விகித ஒப்பந்த புள்ளியில் இரண்டு இனங்களை விலை குறைப்பு செய்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் இவரது ஒப்பந்தபுள்ளி விலை குறைப்பு செய்தும் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.80% அதிகமாக திரு.வி.பி.செபாஸ்டின், பந்தலூர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. வரபெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட 4.80% அதிகமாக திரு.வி.பி.செபாஸ்டின், பந்தலூார் அவர்கள் அளித்ததில் ஜல்லி விலை உயர்வு. டீசல் விலை உயர்வு மற்றும் ஆட்கூலி உயர்வு போன்ற காரணங்களால் ஒப்பந்தபுள்ளியில் இதற்கு மேலும் விலை குறைக்க இயலாது என தெரிவித்துள்ளார்.
3. இப்பணி திட்டப்பணியாக இருப்பதாலும், குறித்த காலத்திற்குள் பணிகள் முடிக்க வேண்டியுள்ளதாலும், ஒப்பந்ததாரர் திரு.வி.பி.செபாஸ்டின், பந்தலூார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
4. மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூார் நகராட்சி(நீலகிரி)**